# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 35 தொலை பேசி: 23411 நிறுவியது 1947.

வள்ளுவர் ஆண்டு 2008 | ஐ. ஆகிர். 13 | வைகாசி 19 (1-6-77) புதன் | புத்தகம் 31 | இதழ் 1


## சுதந்திரனுக்கு அகவை முப்பத்தொன்று!

தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்குரலும் மூதறிஞர் தந்தை செல்வாவின் கொள்கை வழியில் வெற்றிநடை போடுவதுமான உங்கள் அபிமான ஏடாம் சுதந்திரன் இன்று (1-6-77) முதல் தனது 31வது அகவைக்குள் காலடிவைப்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேம். தமிழ் மக்களின் அன்புடனும், ஆதரவுடனும், சுதந்திரன் தனது பணியை தந்தை செல்வா வழி நின்று தொடர்ந்து ஆற்றிவரும் என்ற உறுதியை இச்சமயத்தில் வாசகப் பெருமக்களுக்கு காணிக்கையாக்குகிறேம். —ஆர்

# 'சிங்கள ஆட்சிபீடமே! தமிழீழத்திலிருந்து வெளியேறு!'

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுத் தேர்தல் பிரகடனம்!

தமிழர் விடுதலைக் கூட்டணி வெளியிட்டுள்ள கொள்கைப் பிரகடனம் 1942 ஆண்டில் இந்திய தேசிய காங்கிரசினுல் நிறைவேற்றப்பட்ட 'வெள்ளையனே வெளியேறு' (Quit India) தீர்மானத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. தமிழினம் தனது இழிநிலையிலிருந்து விடுபட, அது முன்பு ஆண்ட தமிழ்ஈழ மண்ணை மீண்டும் ஆளவேண்டும்; சிங்கள ஆட்சிபீடமே தமிழ் ஈழத்தை விட்டு வெளியேறு என்று உறுதியாகவும் இறுதியாகவும் கூறுவதைத்தவிர நமக்கு வேறு வழி இல்லையென்று கூட்டணியின் தேர்தல் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

28-5-77 சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் மூதூர் திரு. ரேச் டீ வாஸ் தலைமையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி நடவடிக்கைக் குழுவில் அங்கீகரிக்கப்பட்டு, அன்று மாலை யாழ் முற்றவெளியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கூட்டணியின் பொதுத்தேர்தல் பிரகடனம் பகிரங்கப் படுத்தப்பட்டது.

தேர்தல் விஞ்ஞாபனத்திலுள்ள சில முக்கிய அம்சங்கள் வருமாறு:-

இலங்கை குடியரசாக்கப்பட்ட பின்னர், அரசியலதிகாரத்தை ஆங்கிலேயரிடமிருந்து பெற்றுக்கொண்ட சிங்கள மக்கள், தம் இறைமையை முழுமைப்படுத்தும் வகையில் தமக்கு ஒரு அரசியலமைப்பை ஆக்கி நடைமுறைப்படுத்தியபின் முதற்

—4-ம் பக்கம் பார்க்க

## தமிழ் ஆசிரியர்களின் ஆதரவு த. விடுதலைக் கூட்டணிக்கே!

எதிர்வரும் பொதுத்தேர்தலில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் வெற்றிக்காக தன்னுடைய உழைப்பினை முழுமூச்சுடன் வழங்குவதென்று தீர்மானித்திருக்கிறது. மேற்படி சங்கத்தினரின் ஆட்சி மன்றக் கூட்டம், திருகோணமலை புனித சவேரியார் தமிழ் வித்தியாலயத்தில் சங்கத்தலைவர் திரு. டி. எஸ். கே. வனசிங்கா தலைமையில் கூடி இந்த முடிவை எடுத்தது.

இதையொட்டிய சங்கத்தின் தீர்மானம் வருமாறு:—

'இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், அரசியல் சார்பற்ற ஒரு தொழிற்சங்கமாக இயங்கிவரும் அதே வேளையில் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதிகளைக்களையுமுகமாகவும்பாரபட்சங்களைநீக்குமுகமாகவும் தமிழ்பேசும் இனம் இதுவரை இழந்துவிட்ட உரிமைகளை மீளப்பெறவும், தமிழ் பேசும் மக்கள் தன்மானத்துடனும் சுயநிர்ணய உரிமையுடனும் சுதந்திரமாக

—2-ம் பக்கம் பார்க்க

## உரும்பராயில் சிவகுமாரன் அஞ்சலிக் கூட்டம்!

தியாகி சிவகுமாரன் நினைவு அஞ்சலிக் கூட்டமும் மௌன ஊர்வலமும் 5-6-77 ஞாயிற்றுக்கிழமை உரும்பராயில் நடைபெறவுள்ளது.

தமிழினத்துக்காக வீர இளைஞன் சிவகுமாரன் தன் இன்னுயிர் பலிதந்தது 1974 யூன் 5ம் திகதியாகும் அந்த தியாகியின் மூன்ருவது ஆண்டு அஞ்சலிதினம் 5-6-77 ஞாயிற்றுக்கிழமை வருகிறது.

அன்றைய தினம் சிவகுமாரன் பிறந்த ஊராகிய உரும்பராயில் நினைவு அஞ்சலிக் கூட்டம் நடைபெறுகிறது. அதற்கு முன்னர் சிவகுமாரன் சமாதி அமைந்திருக்கும் உரும்பராய் வேம்பன் மயானத்தில் சமாதிக்கு வீரவழிபாடு நடைபெறும். இந்த வீர வழிபாட்டைத் தொடர்ந்து அங்கிருந்து சிவகுமாரன் சிலையிருக்கும் இடம்நோக்கி மௌன ஊர்வலம் புறப்படும்.

தியாகி சிவகுமாரன் சிலைக்கு முன்னுல் நினைவு அஞ்சலிக் கூட்டம் நடைபெறும். கூட்டத்துக்கு பொன் சத்திய சீலன் தலைமைதாங்குவார். கூட்டத்தில் நாவலர் அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், சி. கதிரவேற்பிள்ளை, மாவை சேனுதிராசா ஆகியோர் உரையாற்றுவார்கள்.

## தமிழ்ப் பகைவர் அலறியோடிட சாவகச்சேரியில் எழுச்சி மாநாடு

தமிழ்ப் பகைவர்கள் தலைதெறிக்க ஓடிட — தமிழ்ஈழ விடுதலை முழக்கம் நாடெலாம் ஒலித்திட — உதயசூரியன் கொடி ஓங்கிப் பறந்திட—சாவகச்சேரியில் எதிர்வரும் யூன் 4, 5ம் நாட்களில் மாபெரும் எழுச்சிவிழா—உணர்ச்சி விழா எடுக்கிருர்கள் தமிழ் இளைஞர் பேரவையினர்!

இந்த எழுச்சிவிழா, 4ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி சந்தை மைதானத்திலிருந்து புறப்படும் சைக்கிள் ஊர்வலத்துடன் ஆரம்பமாகிறது. இந்த ஊர்வலத்தில் சுமார் 5000 இளைஞர்கள் பங்குபற்றுவார்கள். சந்தை மைதானத்திலிருந்து புறப்பட்டு சாவகச்சேரி தொகுதியின் பல்வேறு பகுதிகளுக்கூடாக சுமார் 15 மைல் தூரம் செல்லும் இச்சைக்கிள் ஊர்வலம் மீண்டும் சந்தை மைதானத்தை வந்தடையும். சைக்கிள் ஊர்வலத்துக்கு சிறைமீண்ட வீரர்களான மாவை சேனுதிராசா, பொன். சத்தியசீலன், பொ. வே. திசைவீரசிங்கம், ஜீவராசா, வண்ணை ஆனந்தன் ஆகியோர் தலைமை தாங்குவார்கள். சகல சைக்கிள்களிலும் உதயசூரியன் கொடிகள் பறக்க ஊர்வலம் நடைபெறும்.

—4-ம் பக்கம் பார்க்க

## தமிழர் விடுதலை கூட்டணிக்கு தேர்தல் ஆணையாளர் அங்கீகாரம்!

தமிழர் விடுதலைக் கூட்டணி ஓர் அரசியல் கட்சியாக தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப் பட்டுவிட்டது. கூட்டணியின் சார்பில் உதய சூரியன் சின்னத்துடன் கூட்டணி வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள். மட்டக்களப்பில் மட்டும் கூட்டணி சார்பில் இருவர் போட்டியிடுவதால், ஒருவருக்கு உதயசூரியன் சின்னமும், மற்றவருக்கு தமிழரசுக்கட்சியின் சின்னமாகிய வீடும் வழங்கப்படவிருப்பதாக அறியப்படுகிறது.

தமிழர் விடுதலைக்கூட்டணியை தேர்தலில் போட்டியிடுவதற்கான ஓர் அரசியல் கட்சியாக பதிவுசெய்வது குறித்து, தேர்தல் ஆணையாளரை கூட்டணியின் செயலதிபர்களான நாவலர் அமிர்தலிங்கம் அவர்களும், மு. சிவசிதம்பரம் அவர்களும் 30-5-77 திங்கள் காலை சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்து, கூட்டணியை தேர்தலில் போட்டியிடும் ஓர் கட்சியாக தாம் அங்கீகரிப்பதாக தேர்தல் ஆணையாளர் அவர்களிடம் அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து கூட்டணியின் செயலதிபர்கள் இருவரும் சுதந்திரன் மூலம் கூட்டணி ஆதரவாளர்கள், கூட்டணி கிளைகள், கூட்டணி வேட்பாளர்களுக்கு பின்வரும் வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

"தேர்தல் கூட்டத்தின்படி நியமனநாள் முதல், வாக்களிப்பு நாள் முடியும் வரை—கட்சிச் சின்னங்களையும், கட்சிக் கொடிகளையும் ஆக மூன்றே மூன்று இடங்களில் மட்டுமே பாவிக்கலாம். (1) வேட்பாளரின் காரில் (2) வேட்பாளரின்

—2ம் பக்கம் பார்க்க


சுடர்
CHUDAR

—வைகாசி இதழ்
இப்போது எங்கும்
விற்பனையாகிறது!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# 'தமிழ் ஈழம் அமைப்பது ஒன்றே மலையகத் தமிழருக்கும் விமோசனம்!"

## கொழும்பில் சேனுதிராஜா பேச்சு'

'சிவனு இலட்சுமணன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இறந்து விட்டான்—சிவனு இலட்சுமணன் எங்கள் உடன் பிறப்பு — அதனுல் எங்கள் இரத்தங் கொதிக்கிறது—மனச்சாட்சி, மனிதாபிமானம் உள்ளவர்களின் இரத்தம் கொதிக்கத்தான் செய்கிறது.

"உலகில் விடுதலைபெற்ற நாடுகளான ருசியா முதல் இந்தியாவரையில் ஆட்சி அதிகாரங்களின், ஏகாதிபத்தியங்களின் கைக்கூலிகளாகப் பொலிசார் பாமர, பாட்டாளி மக்களை மிருகத்தனமாகத் தாக்கியும், கொலை செய்தும் அழித்துவந்த வரலாறுகளைப் பார்த்திருக்கிறேம். அந்த நாடுகளில் பொலிசாரின் அடக்குமுறைகளுக்கெதிராக மக்கள் போராடி விடுதலை பெற்றிருக்கின்றனர்.

"அந்த வழியைத்தான் இந்நாட்டிலும் பொலிசாரும், படைபட்டாளங்களும் கடைப்பிடிக்கின்றன. சிவனு இலட்சுமணனும் இன்று கொல்லப்பட்டுவிட்டான். அவனுக்கு அனுதாபம்—அரசுக்குக் கண்டனந் தெரிவிப்பதோடு நிற்கவேண்டாம். அந்த அநீதியை — துப்பாக்கிக்குண்டை —தமிழர்களின் இதயங்களில் ஏற்போம்—அதைத்தான் தொடர்ந்தும் சிங்கள ஏகாதிபத்தியம் எமக்குத் தருமானுல் நாமும் அந்த வழிகளைப் பின்பற்றித் தமிழீழத்தின் விடுதலைப் போரை யுத்தகளமொன்றிற் சந்திப்போம் அப்படியேனும் தமிழீழத்தை மீட்போம்.

"எனவே மலையகப் பாட்டாளிவர்க்கம் தமிழீழ விடுதலைப் போரில், தோளோடு தோள் நின்று போராட இயக்கத்தை கட்டியெழுப்புமாறு அழைப்பு விடுக்கின்றேன். இன்று வரையும் தொழிலாளர் உரிமைக்குரல் போராடிய தொழிற் சங்கங்கள் பாட்டாளி வர்க்கத்தின் தமிழீழ விடுதலைப் போருக்குப் புறப்படவேண்டும்.

"தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையை ஏற்றுக் கொண்டிருக்கும் தலைவர் தொண்டமான் மலையகப் பாட்டாளி வர்க்கத்தின் தலைவராகவும் இருக்கிருர். தலைவர்கள் மட்டும் ஒன்றுபட்டாற் போதாது. அடிமட்டத்திலிருந்து தொழிலாள — விவசாய இளைஞர் மாணவ சக்திகள் ஒன்றுபட்டுத் தமிழீழ இலட்சியத்திற்குப் போராட வேண்டும் அந்தப் போராட்டம் பாட்டா.ளித் தமிழரின் வர்க்கப் போராட்டங்கூட — சிங்கள பௌத்த—ஏகாதிபத்திய — முதலாளித்துவ— இனவெறி சுரண்டல் ஆட்சிக்கெதிரான வர்க்கப் போராட்டம்.

"தந்தை செல்வா மறைந்தும் மறையாத தெய்வம்—இலட்சியத்தின் சத்தியத் திருவுரு — அந்தத் தெய்வத்தின் அறக்கட்டளை தமிழீழம் — தமிழீழம் தமிழர் மதம் — அதற்கான புனிதப் போரை நடத்துங்கள் என்று தந்தை செல்வா கட்டளை விடுத்துள்ளார். அந்தத் தெய்வக் கட்டளையே எங்கள் நம்பிக்கை உறுதி அதற்காகத் தியாகஞ் செய்வோம் வாருங்கள்—சமதர்மப் பூங்காவை—தமிழீழத்தை—தமிழீழ எல்லைகளுக்கு வெளியே வாழுகின்ற அடிமைப்பட்டுக் கிடக்கின்ற தமிழினத்தின் விடுதலைக்கும், மலர்விப்போம் தமிழீழத்தை — உலகத் தமிழினமே மலையகப் பாட்டாளியே ஒன்றுபடுவோம் — போராடுவோம்—தமிழீழத்தை அமைப்போம் வாருங்கள் என அழைப்பு விடுக்கின்றேன்.

—இவ்வாறு 23-5-77ல் தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளையினர் டெவன் தோட்டத்தில் பொலிசார் நடத்திய படுகொலையை கண்டித்து நடத்திய கண்டனக் கூட்டத்தில் பேசும்போது மாவை சேனுதிராசா குறிப்பிட்டார்.

## கோடீஸ்வரனுக்கு அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் வேண்டுகோள்

'தமிழர் விடுதலைக் கூட்டணியானது இன்று தமிழ் மக்களிடத்தே பெற்றுள்ள செல்வாக்கை சிங்கள அரசு மாத்திரமன்றி வெளிநாடுகள் வல்லரசுகள்கூட மதிக்கத் தொடங்கிவிட்டன. தமிழ்ப் விடுதலைக் கூட்டணி தமிழ் ஈழம் முழுவதிலும் வேட்பாளர்களை நிறுத்தி எமது இலட்சியத்திற்கு வாக்குக் கணிப்பு நடத்த முன்வந்துள்ளதை நீங்கள் அறியாமல் இருக்கமுடியாது. பின்னர் எதற்காக வேறு சின்னஞ்சிறிய குழுக்கள் தமிழ் மக்கள் மத்தியில் இயங்கவேண்டுமென்பதை எம்மால் புரிந்துகொள்ள முடியாதிருக்கின்றது. இந்த வழியிற்ருன் தமிழர் சுயாட்சிக்கழகத்தின் தற்போதைய நடவடிக்கைகளையும் நோக்க வேண்டியுள்ளது.

'நீங்கள் எமது சங்கத்தில் ஒரு காலம் தலைவராக இருந்தவர்கள் என்ற முறையில் சுயாட்சிக் கழக வேட்பாளராக திருமலையில் போட்டியிடுவதன் மூலம் தமிழ் மக்கள் ஒற்றுமையைச் சீர்குலைக்க முயற்சித்தவர்கள் என்ற பட்டியலில் உங்கள் பெயரும் இடம்பெற வழிவகுக்க வேண்டாமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேம்.

அவ்வாறு நீங்கள் போட்டியி— முன்வருவீர்களேயானுல் பைந்தமிழ் மக்களின் பாரம்பரிய பூமியாகிய திருமலையை தமிழர் ஆதிக்கத்தினின்றும் மாற்ருர் பறித்தெடுக்க உடந்தையாகின்றீர்கள் என்ற பழியையும் சுமக்க நேரிடும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேம்'.

—மேற்கண்டவாறு அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் தீர்மானப்படி மேற்படி சங்க பொதுச்செயலாளர் திரு. இ. பேரின்பநாயகம் தமிழர் சுயாட்சிக் கழகப் பொதுச் செயலாளரும், அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் முன்ஞள் தலைவருமாகிய திரு. கோடீசுவரனுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழர் விடுதலை.. தமிழ் ஆசிரியர்...

—1-ம் பக்கத் தொடர்

தேர்தல் அலுவலகத்தில் (3) வேட்பாளரை ஆதரித்து கூட்டம் நடைபெறும் இடங்களில். இந்த மூன்று இடங்களைத்தவிர— ஏனைய பொது இடங்களிலோ— தனிப்பட்ட வீடுகளில் வெளியே தெரியும்படியாகவோ கட்சிக் கொடிகளையும் சின்னங்களையும் பாவிப்பது சட்ட விரோதம். இதை உணர்ந்து பின்னர் ஏற்படக் கூடிய சிக்கல்களைத் தவிர்க்குமுகமாக மேலே குறிப்பிட்ட மூன்று இடங்களைத் தவிர—ஏனைய இடங்களில் உதயசூரியன் கொடிகளை பறக்கவிடுவதையும், உதயசூரியன் சின்னங்களை பொறிப்பதையும் தவிர்க்குமாறும், ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கும் கொடிகளை அவிழ்த்து வைக்குமாறும் தயவுடன் கேட்டுக்கொள்ளுகிறேம்."

—1-ம் பக்கத் தொடர்

வாழவேண்டும் என்று கருதுகிறேம்.

இந்த அடிப்படையில் சுதந்திரத் தமிழ்ஈழ அரசை மீள்விப்பதற்கான ஒரு சர்வ ஜன வாக்கெடுப்பாக எதிர்வரும் பொதுத்தேர்தலை தமிழர் விடுதலைக் கூட்டணி பிரகடனப்படுத்தியிருப்பதால், அதனை நாமும் ஏற்று தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் நிறுத்தப்படுகின்ற வேட்பாளர்களையும், கூட்டணியுடன் ஒன்றிணைந்த இயக்க வேட்பாளர்களையும் ஆதரிப்பதெனத் தீர்மானிக்கிறேம்.

மேற்படி தீர்மானத்தை ஏற்று தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரிக்குமாறு எமது உறுப்பினர்களை வேண்டுவதுடன், தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதனேடு இணைந்த இயக்கமும் வேட்பாளர்களை நிறுத்தாத தொகுதிகளில் உள்ள எமது சங்க உறுப்பினர்கள், தீவிர அரசியலில் ஈடுபடாது, இன நலனையும், சங்கத்தின் கொள்கையையும் கருத்திற்கொண்டு தமது தற்துணிவுக்கேற்ப தமது வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேம்!'

## காசிஆனந்தன் முகவரி:

கவிஞர் காசிஆனந்தனுடன் தொடர்பு கொள்ள விரும்புவோர் பின்வரும் முகவரிக்கு எழுதலாம்.

—காசிஆனந்தன்,
த. வி. கூட்டணி அலுவலகம்
34, முகத்துவார வீதி,
மட்டக்களப்பு.

## தமிழ் மகளிர்பேரவை கண்டனம்!

"இன்றைய இந்த ஆட்சியில் காவல்படையினர் நடத்தும் படுகொலைகளும், அக்கிரமச்செயல்களும் நாமறிந்ததே. இவை மீண்டும் தொடராது என்று நாம் பேசாது செயலற்றிருக்க முடியாது. சிவனு லட்சுமணன் என்ற இளைஞனின் படுகொலையை தமிழ் மகளிர் பேரவை மிக வன்மையாகக் கண்டிக்கிறது. சிங்கள ஆட்சியின் காவல் படையினர் ஒன்றுமறியாத மலையக மக்களைச் சுட்டுப் பலியாக்குவதையும், அவர்களை இந்த நாட்டின் வளத்தைப்பெருக்க உழைத்த மலையக மக்களை அவர்கள் இருக்க இடமின்றிச்செய்யும் கொடுமையையும் இந்தப் பேரவை மிகவன்மையாகக் கண்டிக்கிறது. இறந்து தன்னுயிர் கொடுத்த தமிழ் தொழிலாளரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும் வேளையில் அன்ஞரின் குடும்பத்தவருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறது"

மேற்படி தீர்மானம் 22-5-77ம் திகதி நடைபெற்ற தமிழ் மகளிர் பேரவை நடவடிக்கைக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது. கூட்டத்திற்கு திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரை தலைமை வகித்தார்.

## ஈழவிடுதலை பிரமுகருக்கு வரவேற்பு விழாவும் கருத்தரங்கும்!

லண்டனிலிருந்து இங்கு வருகைதந்துள்ள 'ஈழவிடுதலை முன்னணி' ஆலோசகரும் 'தமிழன் குரல்' ஏட்டின் ஆசிரியருமான திரு. வீரசிங்கம் அவர்களுக்கு வரவேற்பு உபசாரமும், தமிழர் விடுதலைக்கூட்டணி கொழும்புக் கிளையின் வாராந்தக் கருத்தரங்கும் இன்று (1-6-77)புதன்கிழமை மாலை 6 மணிக்கு வெள்ளவத்தை ராமகிருஷ்ண (சிறிய) மண்டபத்தில் திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெறுகிறது. கருத்தரங்கில் திரு. எம். எஸ். செல்லச்சாமி, திரு. கோவைமகேசன் ஆகியோர் உரையாற்றுகிருர்கள்.

## கட்டுப்பாட்டுடன் கூட்டணி வெற்றிக்காக ஒன்றுபட்டுழைப்போம்!

### காங்கிரஸ் இளைஞர் தலைவர் முழக்கம்!

கடந்த தேர்தலின் போது தமிழரசு தமிழ் காங்கிரஸ் என்ற இருவேறு கொடிகளின் கீழ் நாம் நின்ரேம். ஆனல் இன்ரே அந்நிலைமாறிவிட்டது. விடுதலை இயக்கமாக ஒரே அணியாக நாம் நிற்கின்ரேம். தமிழர் விடுதலைக்கூட்டணியிடம் நியமனம் கேட்டு நிராகரிக்கப்பட்ட சிலர்—ஏழு வருடங்களாக இத்தொகுதியை எட்டிப்பார்க்காதவர்கள் — தமிழின ஒற்றுமையைச் சிதறடிக்க — இங்கு காங்கிரசின் பெயரால் வருகின்ருர்கள் ஒவ்வொரு தொகுதியாக மாறி இப்பொழுது யாழ்ப்பாணத்தொகுதிக்கு வந்து நிற்கின்ருர்கள். ஒன்றுமட்டும் சொல்லிவைக்கவிரும்புகின்றேன். யாராயிருந்தாலும் — அது தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் [illegible] சாக இருந்தாலும் கூட— தமிழின ஒற்றுமையைச் சிதைக்க முயல்வார்களாயின் அவர்களைத் தமிழ் மக்கள் புறக்கணிக்கவே வேண்டும். தமிழனைத் தமிழன் ஆளவேண்டும் என்பதுதான் எமது கொள்கையே அல்லாது காங்கிரசா தமிழரசா ஆளவேண்டும் என்பது பிரச்சினை அல்ல. எனவே உண்மையில் ஜீ ஜீ. இறுதி ஆசையாககொண்டிருந்த தமிழ் ஈழத்தைப் பெற விரும்பும்விடுதலைக்கூட்டணியின் வேட்பாளருக்கு வாக்களிப்பவன்தான் உண்மையில் காங்கிரஸ் வாதியாக இருக்கமுடியும்"

இவ்வாறு காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவர்களில் ஒருவராகிய சபா. செந்துராசா குருநகரில் [illegible]

## தந்தை செல்வாவுக்கு அஞ்சலி!

"ஈழம் வாழ் தமிழ் பேசும் இனத்தின் ஈடு இணையற்ற தலைவராம் தந்தை செல்வாவின் இழப்பு ஒரு பெரிய பேரடியாகும். அன்ஞரின் சேவைகளுக்கும், அவர் எங்கள் இனத்திற்கு ஆற்றிய அளப்பரிய தொண்டுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அங்கமான மகளிர் பேரவை தலைவணங்குகின்றது. அன்ஞரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வேளையில் அவரது குடும்பத்தாருக்கும் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அவர் வழி நடந்து தமிழீழம் அமைப்போம்."

மேற்படி தீர்மானம் 22-5-77ம் திகதி தமிழ் மகளிர் பேரவை நடவடிக்கைக் கூட்டதில் நிறைவேற்றப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக தமிழ் தொழிலாளர்கள் தற்பாதுகாப்பு தேடவேண்டிய நிலைக்கு அவர்களைத் தள்ளாதீர்!

## தமிழ் இளைஞர் பேரவை கண்டனத் தீர்மானம்!

1977மே 23ம் திகதி தமிழ் இளைஞர் பேரவை கூட்டிய மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்புக் கிளைத் தலைவர் ஈழவேந்தன் அவர்களால் முன்மொழிய தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் மாவை சேனாதிராசா அவர்களால் வழி மொழியப்பட்டு ஒரே உள்ளத்துடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

கொலை, கொள்ளை, உடற்கு ஊறு, தனியார் உடமைகளுக்குச் சேதம், தொழிலாளர் வதிவிடங்களும் தீக்கிரையாக்கப்பட்டமை ஆகியவற்றினால் மலையகத் தமிழர் மத்தியில் அச்சமும் எதிர்காலமற்ற சூழ்நிலையும் நிலவுவதனாலும்,

அரச நிறுவனங்களில் தொழில் புரிவோர் அந்நிறுவனங்களுக்குரிய ஊர்திகளைப் பயன்படுத்தி கூட்டம் கூட்டமாகப் பட்டப் பகலிலேயே மிகப் பெரிய அழிவையும் சொற்களால் வர்ணிக்கமுடியாத கொடுமைகளையும் செய்தமையாலும்,

இவை பற்றிய உடனடி முறைப்பாடுகள் காவற்றுறையின் தலைமைப் பீடத்திற்கும் உள்ளூர் காவற்றுறைகளுக்கும் அறிவிக்கப்பட்டும் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்படாமையாலும்,

அத்துடன் தக்க காரணம் எதுவும் அற்ற நிலையில் 1977மே 11நாள் பட்டநாவலிலுள்ள டெவன் பெருந்தோட்டத்திலுள்ள இளம் தொழிலாளியைக் காவற்றுறையினர் சுட்டுக் கொன்றமையாலும்—

மேற்குறித்த அநியாயங்கள் அனைத்தும் அப்பாவி மக்கள் மீது கையாளப்பட்டமைக்கு அரசியல் சதி நோக்கோடு காணிகள் வழங்கப்பட்டமையே காரணமாக இருப்பதனாலும்,

எதுவித குற்றமுமற்ற ஏழை மக்கள் காடையர்களால் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டபோது சட்டத்தையும் ஒழுங்கையும் முழுமையாகக் காப்பாற்ற வேண்டிய காவற் படையினர் வெறுமனே பார்வையாளர்களாக இருந்தமை மன்னிக்க முடியாத குற்றமாக இருப்பதனாலும்,

அத்துடன் நாகரிக கோட்பாட்டுககு முற்றிலும் முரண்பட்ட வெறுக்கத் தக்க முறையில் குடியிருப்பிலுள்ள அப்பாவித் தொழிலாளர்கள் மிருகத் தனமான தாக்குதலுக்கு ஆளாகியமையையும்,—

இந்நிலையிலும் மேற்கூறிய அப்பாவித் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு தகுந்த நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கத் தவறின் இம்மக்கள் தம்மைத் தாமே பாதுகாக்கும் நடவடிக்கையில் இறங்குவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

இந்நிலைக்கு மக்கள் தொடர்ந்து தள்ளப்படின் ஆட்சியைத் தொடர்ந்து நடத்த முடியாத சூழ்நிலையும் உருவாகக் கூடும்.

இங்கு கூடியிருக்கின்ற இக்கூட்டம் டெவன் பெருந்தோட்டத்துத் தொழிலாளி சுட்டுக் கொல்லப்பட்டதை மிக வன்மையாகக் கண்டிக்கப்படுவதுடன். கம்பளை தொகுதியில் சான்குயர் டெல்டா பெருந் தோட்டங்களில் கொள்ளையடித்தல் தீயிடல் ஆகியவற்றையும் மிகக் கடுமையாகக் கண்டிப்பதுடன் பின்வரும் நடவடிக்கைகளையும் அரசாங்கம் உடன் எடுக்குமாறு கோருகிறது.

* வேளாண்மைக் காணியமைச்சர் தன் அமைச்சுப் பதவியை உடனடியாகக் துறத்தல்வேண்டும்,

* உடனடியாக சான்குயர் டெல்டா தோட்டங்களில் ஏற்பட்ட மேற்கூறிய கொடிய நிகழ்ச்சிகளுக்குக் காரணமாக இருந்த அரச நிறுவன ஊழியர்களையும் டெவன் பெருந்தோட்டத்தில் இளைஞனின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பொறுப்பாக இருந்த காவற்துறை அலுவலரை அல்லது அலுவலர்களை தற்காலிகவேலை நீக்கம் செய்தல் வேண்டும்

* டெவன் பெருந்தோட்டத்தில் காவற்றுறை நடாத்திய சூடு பற்றியும் சான்குயர் டெல்டா தோட்டங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பற்றியும் கற்றன் பள்ளிக்கூடத்தில் குழந்தைகள் மீது நடாத்திய தாக்குதல் பற்றியும் ஆராய்வதற்கு ஆணைக்குழுவை நியமிக்கவும்.

* சான்குயர் டெல்டா பெருந் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் தமது வேலைகளைத் தொடர்ந்து நடாத்துவதற்கு போதிய பாதுகாப்புக்களை வழங்கவும் டெல்டா பெருந்தோட்டத்தில் தமது வழமையான வாழ்வை மீண்டும் மேற்கொள்ள உடனடி வசதிகளைச் செய்யவும்.

* உடனடியாக சான்குயர் டெல்டா பெருந்தோட்டங்களில் காடையர்களின் படையெடுப்பினால் அங்கு வதியும் பாதிக்கப்பட்டோர்க்கு இழப்பீட்டினை வழங்கி மேற்குறித்த சட்டத்திற்கு முரணான செயல்களுக்கு அரசாங்கம் பொறுப்பில்லை என்பதை எடுத்துக்காட்டவும்.

# குமார் பொன்னம்பலத்துக்கு ஒரு கடிதம்!

அன்புள்ள குமார் பொன்னம்பலம் அவர்களுக்கு—

உங்களைப்பற்றி அண்மைக் காலமாக பத்திரிகைகளில் அடிபடும் செய்திகளும், தமிழ் இனத்தின் தேசிய விடுதலை இயக்கமும்- உங்கள் தந்தையும் தனிப்பெருந் தலைவருமான அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் ஆசியும் பெற்ற தமிழின ஒற்றுமைக் கோட்டையுமான தமிழர் விடுதலைக் கூட்டணியை எதிர்த்து நீங்கள் தேர்தலில் போட்டியிடப் போவதாகவும் ஏடுகளில் வருகின்ற செய்திகளும், நிச்சயமாக உங்களுக்கோ உங்கள் தந்தைக்கோ, தமிழ் சமுதாயத்துக்கோ பெருமை அளிப்பதாக இல்லை!

1972 மே 14ல் தமிழர் கூட்டணி உருவாகியபோது—உங்கள் தந்தை ஜீ. ஜீ. அவர்கள் தனிப்பட்ட காரணங்களுக்காக வெளிப்படையாக அதில் அப்போது கலந்து கொள்ளாவிடினும், கூட்டணிக்கு ஆதரவும் ஆசியும் வழங்கினர்!

கூட்டணியின் நடவடிக்கைகளையோ, தீர்மானங்களையோ எதிர்த்து அவர் ஒரு சொல்கூடக் கூறியதில்லை!

1976 மே 14 வட்டுக் கோட்டை மாநாட்டின் போது கூட்டணியின் முப்பெருந் தலைவர்களில் அவரும் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டார்!

கூட்டணியின் தலைமைப் பதவியை மனமுவந்து ஏற்றுக்கொண்டார்! பின்னர் கூட்டணித் தலைவர்களுக்கு எதிராக தேசத்துரோகக் குற்றச்சாட்டுசுமத்தப்பட்டபோது—உடல் நலமில்லா நிலையிலும் ட்ரயல் — அற் — பார் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்காடி வெற்றியீட்டினர்.

இதன்மூலம் கூட்டணியுடன் அவர் இரண்டறக் கலந்துகொண்டார்!

இவையெல்லாம் உங்களுக்கும் நாட்டுக்கும் தெரியும!

இவ்வாறு, உங்கள் தந்தை திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் தலைவராக இருந்து பணியாற்றிய தமிழின ஒற்றுமைக்கோட்டையாம் கூட்டணியை எதிர்ப்பதற்கு எப்படி துணிவு வருகிறது உங்களுக்கு?

தேர்தலில் உங்களுக்கு ஒரு தொகுதியை தரவில்லையென்ற அற்ப சுயநலத்துக்காக 'அப்பு'வின் ஆசியுடன் உருவான கூட்டணியை நீங்கள் எதிர்க்க முற்படலாமா?

உங்கள் தந்தை ஜீ. ஜீ. அவர்கள், 'மித்திரன்' பத்திரிகைக்கு இறுதியாக அளித்திருந்த பேட்டியில் தாம் தேர்தலிலேயே போட்டியிடப்போவதில்லை யென்றும் இன ஒற்றுமையைக் காப்பதே தனது இலட்சியம் என்றும் கூறியிருந்ததை மறந்துவிட்டீர்களா?

அவரது மகனை நீங்கள் இன்று தேர்தலுக்காக ஒற்றுமையை உடைக்கப்போகிறீர்களா? தந்தையின் பெருந்தன்மை மகனுக்கும் வேண்டாமா?

உங்கள் தந்தையை 'வாலறுந்த நரி' யென்று அன்று கேவலமாக வசைபாடிய வி. குமாரசாமி போன்றவர்களின் தாளத்துக்கு நீங்கள் இன்று ஆட முற்படலாமா?

தனது மகன் தனது சொந்தக் காலில் நிற்கிறான் என்பது தான் ஒரு தந்தைக்குப் பெருமையளிப்பதே தவிர—தந்தை ஈட்டிவைத்த செல்வாக்கினால் மகன் சுகபோகம் அனுபவிப்பது தந்தைக்கு நிச்சயமாகப் பெருமை தருவதல்லவே!

நீங்கள் அரசியலில்—விடுதலை இயக்கத்தில் — பொது வாழ்வில் ஈடுபட்டு — உங்களது சேவையால் நீங்களாகக் காலூன்ற வேண்டுமே தவிர — 'அப்பு'வின் செல்வாக்கில் குளிர்காயலாம் என்று நினைப்பது 'அப்பு'வுக்கும் பெருமையளிப்பதல்ல; மகனுக்கும் பெருமையளிப்பதல்ல!

அரசியலிலும், இயக்கத்திலும், பொதுவாழ்விலும் காலூன்றுவதற்கு வழி கூட்டணியை எதிர்த்து தேர்தலில் போட்டியிடுவதல்ல!

கூட்டணியை எதிர்த்துப் போட்டியிடுவதால் தமிழ் மக்களின் வெறுப்பை சம்பாதித்துவிடுகிறீர்கள்!

மாறாக—தேர்தலிலிருந்து ஒதுங்கியிருந்து—நாடு முழுவதும் சுற்றித்திரிந்து கூட்டணியின் வெற்றிக்காக இதய சுத்தியுடன் பாடுபட முன்வாருங்கள்!

இயக்கத்தில் முழுமையாக உங்களை ஈடுபடுத்திக்கொள்ளுங்கள்!

இயக்கத்திலிருந்து எவரையும் வெளியே விரட்டுவது நம் எண்ணமல்ல — எல்லோரையும் அணைப்பதுதான் கூட்டணியின் நோக்கம்!

அந்த அடிப்படையில்தான் வி. பொன்னம்பலத்தையும் எம்மோடு இன்று இறுக அணைக்கிறோம்!

குமார் அவர்களே! தேர்தல் பைத்தியத்திலிருந்து தெளிவுபெற்று, இயக்க வெற்றிக்காக — கூட்டணிக்காக உழைப்பதற்கு உங்கள் மனதை பக்குவப்படுத்துங்கள்!

விசுவாசமுடன் கூட்டணியின் இலட்சியத்துக்காக பாடுபடுங்கள்! அப்படி உழைப்பீர்களானல்—

உங்களுக்கும் பின்னர் ஒரு காலம் வரும்! காத்திருங்கள்!

அதற்குள் அவசரப்பட்டு உங்கள் தலையில் நீங்களே மண்ணைவாரிப் போட்டுக் கொண்டுவிடாதீர்கள்!

கூட்டணியை எதிர்த்து இம்முறை போட்டியிடுவீர்களானல்—இத்தேர்தலுடன் உங்கள் அரசியல் சரித்திரம் முற்றுப் பெற்றுவிடும்!

கூட்டணியை எதிர்த்துப் போட்டியிடாது, கூட்டணியின் வெற்றிக்காக இயக்கப் பிரசார வேலைகளில் ஈடுபடுவீர்களானல்—உங்கள் அரசியல் வரலாறு தொடர் கதையாக நீளும்!

இதில் எந்த வழியை தெரிவுசெய்யப் போகிறீர்கள்!

விரைவில் முடிவுசெய்து கொள்ளுங்கள்!

—தமிழ்தாசன்

## யாழ் குருநகரில் கூட்டணி அலுவலகம் திறப்பு!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது கிளை குருநகர் சனசமூக நிலயத்திற்கு முன்பாக இடியோசை என வெடியோசை முழங்க சட்டமாணவன் திரு. எம். அலோசியஸால்திறந்துவைக்கப்பட்டது. அச்சமயம் அங்குவருகை தந்த யாழ்ப்பாணத்தொகுதி வேட்பாளர் திரு.யோகேஸ்வரனுக்கு பெருந்தொகையான வெண்ணிற மல்லிகை மாலைகள் சூட்டப்பட்டன. திறப்பு விழாவுக்கு திரு. எம். அலோசியஸ் தலைமை தாங்கினர். வண்ணை ஆனந்தன் — காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவர்களுள் ஒருவரான சபா செந்துராசா— இளைஞர்பேரவைப் பிரமுகர் எஸ். கே. மகேந்திரன்— யாழ்தொகுதி வேட்பாளர் யோகேஸ்வரன் உட்படப் பலர் சொற்பொழிவாற்றினர். கூட்ட முடிவில் குருநகர் இளைஞர்பேரவைத் தலைவர் கிறிஸ்ரியன் நன்றி நவின்றார்.

கூட்ட ஆரம்பத்தில் மறைந்த தலைவர்கள் திருச்செல்வம், ஜி. ஜீ., தந்தை செல்வா ஆகியோருக்கு ஒரு நிமிட மௌனஞ்சலிசெலுத்தப்பட்டது.

[கூட்டம் முடிந்ததும் நூற்றுக்கணக்கான குருநகர் வாக்காளர்களை வீடுவீடாகச் சென்று சந்தித்தார். அச்சமயம் அவருக்கு அங்கு அன்பும் விடுதலை உணர்ச்சியும் கலந்த அமோக வரவேற்புகள் இடம்பெற்றன.]

## மகளிர் பிரார்த்தனை!

தமிழ் மகளிர் பேரவையின் கொழும்புக் கிளையினர் நடாத்தும் வாராந்தப் பிரார்த்தனை 3-6-77 வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு பம்பலப்பிட்டி அர்ச் மரியாள் தேவாலயத்தில் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● துரையப்பா கொலை வழக்கு

# யாழ் நீதிமன்றத்திலேயே விசாரிக்கப்படவேண்டுமென உயர் நீதிமன்றத்துக்கு மனு?

அல்பிறட் துரையப்பா கொலை வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில்விசாரிக்கபடுவதற்கு ஆட்சேபம் தெரிவித்தும், அதை யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்திலேயே விசாரிக்கும் படி உத்தரவிடுமாறு கோரியும் குற்றம் சாட்டப்பட்டுள்ள சந்தேக நபர்கள் சார்பில் உயர் நீதிமன்றத்திற்கு விரைவில் மனுச்செய்யப்படும் என்று தெரிகிறது.

துரையப்பாகொலை வழக்கின் சந்தேக நபர்களான கலாபதி, கிருபாகரன், லோகநாதன், சிறீதரன் சந்ததியார் ஆகிய ஐவரும், உயர் நீதிமன்றத்திஞல் விளக்கமறியலிலிருந்து விடுதலையான பின்னர் 27-5-77 வெள்ளிக்கிழமை காலை யாழ் மேல்நீதிமன்றத்தில் தாமாகவே ஆஜராகினர். எதிரிகளின் சார்பில் சட்டத்தரணிகள் மு. சிவசிதம்பரம் அ. அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், சி. கதிரவேற்பிள்ளை, ஸ்ரீசிவாயா ஆகியோர் வாதிட்டனர்.

எதிரிகளான ஐந்து இளைஞர்களையும் தலா ரூபா5000 உறுதிப்பிணையில் செல்ல நீதிபதி ஜனுப் அப்துல்காதர் அனுமதித்ததுடன், மேற்படி வழக்கை கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு இடமாற்றும் உத்தரவை சட்டமா அதிபரின் கட்டளை அதிகாரத்தின் கீழ் நீதிபதி பிறப்பித்தார்.

ஜூன் 14ம் திகதிகொழும்பு மேல்நீதிமன்றத்தில் எதிரிகள் ஐந்துபேரும் ஆஜராகவேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# சுதந்திரன்
SUTANTIRAN

## எட்டியாந்தோட்டையில் செல்வா அஞ்சலிக் கூட்டம்

தமிழ்ஈழத் தந்தை மூதறிஞர் தந்தை செல்வா அவர்களுக்கு அஞ்சலி தெரிவிக்கும் இரங்கற் கூட்டமொன்று எட்டியாந்தோட்டை புனித மரியாள் தமிழ் வித்தியாலயத்தில் 15-5-77 ஞாயிறு பிற்பகல் களனிவெளி கலைக்கழகத்தின் சார்பில் திரு. ஏ. வி. பி. கோமஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருவாளர்கள் ஏ. பாலகிருஷ்ணன், ச. செல்வநாயகம், எம். பி. இராமன்,கைலைநாதன் ஆகியோர் பேசினர். கவிஞர்கள் பெரியசாமி பிள்ளை கவிதாஞ்சலி நிகழ்த்தினுர்.

இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கிய திரு. ஏ. வி. பி. கோமஸ் பேசுகையில், நேர்மை, தூய்மை, தியாகம் நிறைந்த தலைவராக தந்தை செல்வநாயகம் விளங்கினுரென்றும், அவருடைய மறைவுடன் ஒரு சகாப்தம் முடிந்துவிட்டதென்றும் குறிப்பிட்டார்.

தமிழ் இளைஞர் பேரவையின் முன்னணி வீரர்களில் ஒருவராகிய திரு. ஆ. ரகுபதிபாலசிறீதரன் பேசுகையில் — வயதால் முதிர்ச்சி பெற்றிருந்தாலும் உள்ளத்தால் தீவிரவாதியாக விளங்கிய தந்தை செல்வா மீது தமிழ் இளைஞர்கள் எப்போதும்பயபக்தி கொண்டிருந்ததாகவும், அவரது வழியில் சுதந்திரத் தமிழ் ஈழம் காண இளைஞர்கள் போராடுவார்கள் என்றும் குறிப்பிட்டார்.

சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் பேசுகையில் — இந்திய நாட்டை 'காந்தி நாடு' என்றுதான் பல வெளிநாட்டார் குறிப்பிடுவதுண்டு; அதே போல அமையவிருக்கும் சுதந்திர ஈழம் 'செல்வா நாடு' ஆக விளங்குழ் என்ருர்.

திரு. ஈழவேந்தன் பேசுகையில் — தந்தை செல்வா காட்டிய பாதையில் தீவிரமாக உழைத்து தமிழ் இனத்தை சுதந்திரமும் சுயநிர்ணய உரிமையும்கொண்ட இனமாக வாழவைப்பது தான் தந்தைக்கு நாம்செய்யும் கைம்மாறு என்ருர்.

'அல்வைச் சுந்தரன்' இயற்றிய செல்வா இரங்கற் கவிதையை 'பொப்அன்ரன்' உணர்ச்சியுடன் படித்தார்.

# சிங்கள ஆட்சிபீடமே...

—1-ம்பக்கத் தொடர்

பொதுத்தேர்தல் நடக்கவிருக்கிறது. இத்தேர்தலில் மக்கள் அளிக்கும் வாக்கு அடுத்து ஆட்சிபீடம் ஏறுவோர் யார் என்பதை மாத்திரம் தீர்மானிக்கும் வாக்கல்ல; மக்கள் இறைமை என்ற போர்வையின் கீழ் ஆட்சியுரிமையை முற்று முழுதாக சிங்கள இனம் பெற வழிகோலும் அரசியல் யாப்பை, தம் சுதந்திரத்தை இழந்து நிற்கும் இந்த நாட்டுத் தமிழ்பேசும் மக்கள் ஏற்றுக்கொள்ளுகிருர்களா இல்லையா என்பதை நிர்ணயிப்பதாகவே இப்பொதுத் தேர்தல் அமையும்.

1977ல் நடக்கப்போகும் பொதுத் தேர்தல் தமிழ் தேசிய இனத்தின் சரித்திரத்தில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒன்ருகும். இத்தேர்தலில் தமிழ் பிரதேசத்தைப் பொறுத்தவரை தமிழ் தேசிய இனத்தின் ஒரே அரசியல் இயக்கத்துக்கும் அவ்வினத்தை அடக்கி ஆளும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெறு மோதலேயாகும் சிங்களப் பிரதேசத்தில்நடைபெறும் தேர்தல், ஆட்சியை எந்தக் கட்சியின் கையில் ஒப்படைப்பதென்பதை நிர்ணயிக்க நடைபெறுகிறது. தமிழ் பிரதேசத்தில் நடைபெறும் தேர்தல்-விடுதலையா, தொடர்ந்தும் அடிமைத்தனமா என்பதை நிர்ணயிப்பதற்கே நடைபெறுகிறது. அதைத் தீர்மானிப்பதற்கே தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தலைப் பயன்படுத்தப் போகிறது.

1972ம் ஆண்டு அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறைக்கு வந்த குடியரசு அமைப்புக்கு தமிழ் தேசிய இனத்தின் பிரதிநிதிகள் சம்மதம் கொடுக்காது அதை நிராகரித்தனர். சிங்கள மக்களின் கட்டளையைப் பெற்று அவர்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஆக்கப்பட்டதே இன்றைய குடியரசு அரசியல் அமைப்பாகும். அதே போல் தமிழ் தேசிய இனத்தின் கட்டளையைப் பெற்று அவர்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அவர்களின் இறைமையை உறுதிப்படுத்தி தமிழ் ஈழ விடுதலையை நிலைநாட்டுவதற்கு ஒரு சந்தர்ப்பமாக அடுத்து வரும்பொதுத்தேர்தலை தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்நோக்குகிறது.

எமது தனி இறைமையை மீண்டும் நிலைநாட்டுவதைத் தவிரவேறு வழியில்லை. கடந்த 30வருட ஆட்சி, தமிழ் பிரதேசத்தையும் தமிழ் தேசிய இனத்தையும் எந்த நிலைக்குத் தள்ளியிருக்கிறது என்பதை சுருக்கமாக எடுத்துக்கூறவிரும்புகிருேம்.

இந்த இழி நிலையில் இருந்து நாம் விடுபட முன்பு ஆண்ட மண்ணை மீண்டும் ஆளவேண்டியதேயாகும். தமிழ் ஈழத்தை விட்டு வெளியேறு சிங்கள ஆட்சி பீடமே, என்று உறுதியாகவும் இறுதியாகவும் கூறுவதைத்தவிர நமக்கு வேறு வழியில்லை.

எதிர்வரும் பொதுத்தேர்தல் இந்த முடிவை ஆட்சியாளர்களுக்கு தமிழ் தேசிய இனம் எடுத்துக் கூறுவதாக அமையவேண்டும். சிங்கள ஆட்சியிலிருந்து தமிழினம் மீட்சிபெறத் தீர்மானித்துவிட்டது என்பதை மேற்படி தேர்தல் முடிவுகட்டும். எனவே எதிர்வரும் பொதுத்தேர்தலில் இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்களின் பாரம் பரியமாக வாழும் தொடர்பான பிரதேசம் முழுவதையும் உள்ளடக்கிய ஒரு சுதந்திர இறைமையுள்ள மதச்சார்பற்ற தமிழ் ஈழ அரசை நிறுவுவதற்கு தமிழ்தேசிய இனத்தின் கட்டளையை தமிழர் விடுதலைக் கூட்டணி நாடுகிறது.

தமிழ்தேசிய இனம் தனக்குரித்தான சுயநிர்ணய உரிமையை உபயோகித்து தன் பூரண இறைமையை தன் தாயகத்தில் நிலைநாட்டத் தீர்மானிக்கவேண்டும். அந்தத் தீர்மானத்தை சிங்கள அரசும் உலக நாடுகளும் அறியச்செய்வதற்கு ஒரே வழி இத்தேர்தலில் த. வி. கூட்டணிக்கு வாக்களிப்பதேயாகும். தமிழ் தேசிய இனத்தின் கட்டளையைப் பெற்ற பிரதிநிதிகள் தமிழ் ஈழதேசிய மன்றமாக அமைந்து தமிழ் ஈழத்துக்கு ஓர் அரசியல் அமைப்பை ஏற்படுத்துவார்கள். அத்துடன் அதை நடைமுறைப் படுத்துவதன் மூலம் தமிழ் ஈழ சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்கு சமாதான வழிகள் மூலமோ, நேரடி இயக்கம் மூலமோ, போராட்டங்கள் மூலமோ நடவடிக்கை எடுப்பார்கள்.

தமிழ்தேசிய இனம் சரித்திரத்தில் திருப்புமுனையில் நிற்கிறது. த.வி. கூட்டணி மூலம் நாம் கண்ட ஒற்றுமை சிங்கள ஏகாதிபத்தியத்தை சிந்திக்க வைத்திருக்கிறது. இக்கட்டத்தில் தமிழ்பேசும் மக்களின் ஏகோபித்த தீர்ப்பு எமது சுதந்திரத்தை பெறுவதற்கு முதற்படியாகத்தேவை. எனவே தனிப்பட்ட வேட்பாளர்கள் மீது கொண்டவிருப்பு, வெறுப்புகளை ஒதுக்கி வைத்து பிரதேசபேதம், சாதிபேதம்,சமயபேதங்களை மறந்து ஆண்ட தமிழ் இனத்தை மீண்டும் ஆளவைப்போம் என்ற ஒரே உறுதியோடு த.வி. கூட்டணி தமிழ்தேசிய இனத்தின் விடுதலைக்கு உங்கள் வாக்குகளை அளிக்குமாறு வேண்டுகின்ருேம்.

(கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம், எதிர்வரும் ஞாயிறு இதழில் இருந்து பகுதிபகுதியாக சுதந்திரனில் வெளியிடப்படும்)

## தமிழ்ப் பகைவர்..

—1-ம் பக்கத் தொடர்

சைக்கிள் ஊர்வலத்தை தொடர்ந்து, மாணவர் மாநாடும் அதன்பின்னர், தமிழ் மகளிர் மாநாடும் இடம்பெறும். மகளிர் மாநாட்டுக்கு திருமதி மங்கை அமிர்தலிங்கம் தலைமைதாங்குகிருர். இதையடுத்து திரு. பாலரத்தினம் தலைமையில் சாவகச்சேரி தொகுதி தமிழ் இளைஞர் பேரவை மாநாடு நடைபெறும்.

5-6-77 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நுணுவில் சந்தியிலிருந்து ஆரம்பமாகும் எழுச்சி ஊர்வலம், சாவகச்சேரி சந்தை மைதானத்தை மாலை 6 மணிக்கு வந்தடையும். அதை தொடர்ந்து நடைபெறும் பொதுக்கூட்டத்தில் நாவலர் அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், வண்ணை ஆனந்தன், மாவை சேனுதிராசா, பொன். சத்த்யசீலன் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

## சுதந்திரன்
(வாரம் இருமுறை)
சந்தா விபரம்

ஓராண்டு — ரூபா. 50.00
அரையாண்டு — „ 25.00

சுடர்
(கலை இலக்கிய திங்களிதழ்)
ஓராண்டு — ரூபா. 12.00

அனுப்பவேண்டிய முகவரி:
நிர்வாகி சுதந்திரன்
194 ஏ, பண்டாரநாயக வீதி,
கொழும்பு-12.

## விசேட பொதுச்சபை

மட்டக்களப்பு தமிழ் இளைஞர்பேரவையின் பொதுச் சபையின் விசேட கூட்டமொன்று 1-6-77 புதன் கிழமையன்று பி. ப. 3 மணியளவில் மட்டக்களப்பு த. வி. கூட்டணி அலுவலகத்தில் இடம்பெறும் மட்டக்களப்புத்தொகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்கள் அனைவரையும் வந்து கலந்துகொள்ளுமாறு மட்டக்களப்பு தமிழ் இளைஞர்பேரவையின்பொது செயலாளர் இரா. பரமதேவா அழைப்பு விடுக்கின்ருர்.


## மில்க்வைற் செய்தி-இதழ் 18

10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 நீம் வாசனை சோப் அல்லது 2 மெடிக்கேட்டட்சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி செய்தியை பெற்றுக் கொள்ளுங்கள்.

விநியோகப்பகுதி:
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1977ம் வருடம் ஜூன் மாதம் 1ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org